# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 25.02.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

இன்று நான் ஒரு துஆவின் பக்கம் கவனமூட்ட விரும்புகிறேன். இது முழு இஸ்லாமிய உலகுடன் தொடர்புடையதாகும். இது முஸ்லிம்களுடன் நாம் கொண்டிருக்கும் அனுதாபத்தினால் விளைந்த பொறுப்பாகும். ஒரு அஹ்மதிக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் அன்பு இருக்கிறது; இருக்கவும் வேண்டும். தாம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை சார்ந்திருப்பதாகக் கூறி கலிமா ஓதி தம்மை முஸ்லிம் என்று கூறுகின்ற ஒரு நபர் தாம் ஒரு முஸ்லிம் என்ற காரணத்தால் ஏதாவது ஒரு வகையில் குறி வைக்கப்படுகின்ற போது அல்லது எந்த ஒரு முஸ்லிம் நாட்டின் நிம்மதியின்மை, சட்டம் ஒழுங்கு சீர்குலைந்தும் இருக்கின்றதென்றால், அவர்களுக்காக ஒரு உண்மையான முஸ்லிமாகத் திகழ்கின்ற ஓர் அஹ்மதி துஆ செய்ய வேண்டும்.

நாம் இக்காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டவர்கள் ஆவோம். எனவே முஸ்லிம் மக்களின் மீது அதிக அனுதாபம் காட்டக்கூடிய கடமை நமக்கு இருக்கிறது. நாம் பைஅத் உடன்படிக்கை எடுக்கும்போது இறைவனின் படைப்பினங்களின் மீது அனுதாபம் காட்டுவது நமது கடமை என்று கூறி உடன்படிக்கை எடுக்கிறோம். இவ்வாறிருக்க முஸ்லிம்களுக்காக நாம் இந்த உணர்வை எல்லாவற்றிற்கும் மேலாக வெளிப்படுத்துவது அவசியமாகும். நம்மிடம் உலக ஆட்சி, அதிகாரமோ, செல்வமோ கிடையாது. எனவே, ஆக்கப்பூர்வமாக நாம் முஸ்லிம் நாட்டிற்கு ஏதாவது தேவை ஏற்படும் போது உதவி செய்ய நம்மால் முடியாது. குறிப்பாக, தற்போதைய சூழ்நிலையில் சில நாடுகளில் காணப்படும் அரசியல் வீழ்ச்சியின் போது நாம் அவர்களுக்கு சென்று உதவும் அளவிற்கு நம்மிடம் வசதிகள் இல்லை. ஆனால் நாம் துஆ செய்ய முடியும். இதன் பக்கம் ஒவ்வொரு அஹ்மதியும் கவனம் செலுத்த வேண்டும். அல்லது இன்றைய நாட்களில் பிரச்சனைகள் எழுந்துள்ள அந்த நாடுகளில் வசிக்கின்ற அஹ்மதிகள் மற்றும் அஹ்மதிகளாக இருக்கின்ற அந்நாட்டின் குடிமக்கள் துஆ செய்வது மட்டுமின்றி அரசாங்க பதவி வகிப்பவர்கள் மற்றும் அரசியல்வாதிகளோடு தொடர்பு வைத்திருக்கும் அஹ்மதிகள் அவர்களுக்கு புரிய வைக்க வேண்டும். சுயநலத்தை விட சமுதாய நலனுக்கே அதிக முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்று அவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும்.

ஆனால் பொதுவாக முஸ்லிம் அரசியல்வாதிகள், அரசியல் பொறுப்புகளை நிர்வகிக்க வந்தால் அல்லாமல், வேறு ஏதாவது வழியில் அதிகாரம் வகிக்கின்ற போது இறை படைப்பினங்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளையும் தமது கடமைகளையும் மறந்து விடுகின்றனர். இதற்கான அடிப்படைக் காரணம் இறையச்சம் இல்லாதது ஆகும் என்பது வெளிப்படையாகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உம்மத் (சமுதாயம்) என்று தம்மை கூறிக்கொண்டு, திருக்குர்ஆனின் மீது ஈமான் கொண்டுள்ளோம்; அதை ஓதுகின்றோம் எனறு வாதம் செய்து கொண்டு அதன் அடிப்படை கட்டளைகளை மறந்து விடுகின்றனர். உங்களுக்கும் பிறருக்கும் இடையிலான கருத்து வேறுபாடு இறையச்சம் ஆகும் என்பதை மறந்து விடுகின்றனர். தம்மை முஸ்லிம் என்று அழைத்துக் கொண்டும் இஸ்லாத்தின் பெயரை பயன்படுத்திக் கொண்டும் இறையச்சம் இல்லாமல் இருந்தால் உலக மோகம், பேராசை ஆகியவை ஆட்கொள்ளும் என்பது தெரிந்ததே. இதனால் இறைவனுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளும், படைப்பினங்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளும் சீரழிக்கப்படும். செல்வம், ஆட்சி மோகம், அதிகார போதை ஆகியவற்றிற்கு இறைவனின் கட்டளையை விட அதிக முக்கியத்துவம் வழங்கப்படும். அல்லது செல்வத்தைப் பாதுகாப்பதற்கும், ஆட்சியை உறுதிப்படுத்துவதற்கும் பிற நாட்டைச் சார்ந்திருக்க வேண்டியதிருக்கும்.

அந்நிய சக்திகளின் நலனும் பாதுகாப்பும் தமது நாட்டு மக்களின் நலனை விடவும், முஸ்லிம் சமுதாயத்தின் நலனை விடவும் அதிக முக்கியம் என்று கருதப்படுகிறது. இதற்காக தேவைப்பட்டால் தமது நாட்டின் பொதுமக்களின் மீது அநியாயம் இழைக்கவும் தயங்குவதில்லை. இன்னும் நாம் பார்க்கிறோம். செல்வத்தின் மீது உள்ள பற்று அரசாங்க அதிகாரிகளை சுயநலவாதிகளாக ஆக்கி விட்டது.

இவர்கள் தமது சொந்த கஜானாவை நிரப்புவதில் அதிக அக்கறை கொண்டவர்களாக உள்ளனர். இவர்களின் சுயநலத்திற்கும், படைப்பின சேவைகளுக்கும் இடையே எந்த பொருத்தமும் இல்லை. நூறு மடங்கு தமக்காக என்றால் ஒரு மடங்கு பிற சேவைகளுக்காக என்ற கணக்கில் இவர்கள் பணி செய்கிறார்கள். வெளிவந்துள்ள செய்திகளை வைத்துப் பார்க்கும் போது அதாவது, ஒரு அரசியல் தலைவர் நூற்றுக்கணக்கான கிலோகிராம் தங்கத்தை கடத்தி விட்டார். வேறு சிலரின் வீட்டு கீழ்த்தளங்கள் களஞ்சியங்களால் நிரம்பியுள்ளது. இன்னொருவர் சுவிஸ் பேங்கில் நாட்டின் சொத்துக்களை தன்னுடைய கணக்கில் போட்டு வைத்துள்ளார். இன்னொருவர் வெளிநாட்டில் எண்ணற்ற லட்சங்கள் மதிப்பிலான சொத்துக்களை வாங்கிக் குவித்துள்ளார்.

நாட்டின் பொதுமக்கள் ஒருவேளை ரொட்டிக்கு அலைகிறார்கள். இது அரபு நாடுகளின் நிலை மட்டுமல்ல. பாகிஸ்தானும் அதில் அடங்கும். அங்கு விலைவாசி மிகவும் அதிகரித்து விட்டது. ஒருவேளை ரொட்டி சாப்பிடுவது கூட அங்கு பலருக்கு கஷ்டமாகி விட்டது ஆனால் அரசு அதிகாரிகளும், அரசாங்க தலைவர்களும் சமுதாயத்தின் பணத்தை எடுத்து தமது சுயநலனுக்காகவும், ஆடம்பரங்களுக்காகவும் லட்சக்கணக்கான ரூபாய்களுக்கு பிற நாடுகளுக்கு செல்லும் போது ஷாப்பிங் செய்து விடுகிறார்கள். எனவே, பாகிஸ்தானாக இருக்கட்டும், மத்திய கிழக்கு நாடுகளாக இருக்கட்டும்; அல்லது சில ஆப்பிரிக்க நாடுகளாக இருக்கட்டும். இன்றளவில் நிலைத்து நின்று வழிகாட்டுகின்ற ஒரு வேத நூலாகிய திருக்குர்ஆனும், சுன்னத்தும் கிடைக்கப் பெற்ற முஸ்லிம் தலைவர்கள் இறைவனுக்கு செய்ய வேண்டிய உரிமைகள் மற்றும் இறைபடைப்பினங்களுக்குச் செய்ய வேண்டிய உரிமைகள் ஆகியவற்றை சீரழிக்கின்றார்கள். முஸ்லிம் உம்மத்திற்கு செய்ய வேண்டிய கடமைகள் ஒருபுறமிருக்க, இவர்கள் தமது சக நாட்டு மக்களின் சொத்துக்களையும் அபகரிக்கிறார்கள். இவ்வாறான மக்கள் இறையச்சத்தின்படி நடந்து ஆட்சி நடத்துவார்கள் என்று நாம் எப்படி நம்ப முடியும்? இவர்கள் நாட்டில் குழப்பங்கள் மற்றும் கிளர்ச்சியை ஏற்படுத்துபவர்கள் ஆவர் என்று வேண்டுமானால் கூறலாம். தமது சக்தியைப் பயன்படுத்தி கொஞ்ச காலம் ஆட்சி அமைக்க முடியும். ஆனால் பொதுமக்களுக்கு நிம்மதியை வழங்க இவர்களால் ஒருபோதும் முடியாது. இவ்வாறான சூழ்நிலையில் ஒரு எதிர்விளைவு ஏற்படுகிறது. இது திடீரென்று ஏற்படுவது போல் தெரியும். ஆனால் திடீரென்று ஏற்படுவதில்லை. இது வெகு நாட்களாகவே உள்ளுக்குள்ளேயே ஒரு எரிமலைக் குழம்பாக வெந்து கொண்டிருக்கும் ஒன்றாகும். இது சில நாடுகளில் இப்போது வெளிப்பட ஆரம்பித்து விட்டது. இன்னும் சில நாடுகளில் சமயம் வரும் போது வெளிப்படும். இந்த எரிமலைக் குழம்பு வெடிக்கும் போது சக்தி வாய்ந்த ஆட்சியாளர்களையும் சாம்பலாக்கி விடுகிறது.

இவ்வாறான எதிர்நடவடிக்கைக்கு என்று எந்தவொரு வரையறையும் நிர்ணயிக்கப்படாததாலும், அநீதியிழைக்கப்பட்டவர்கள், அநீதியிழைத்தவர்களுக்கு எதிராக எடுக்கும் நடவடிக்கையாக இருப்பதாலும், தமது கருத்தை சுதந்திரமாக விடுவிப்பதற்கு முடிந்த அளவு எல்லா சக்தியும் செலவழிக்கப்படுவதாலும், அநீதியிழைக்கப்பட்டவர் வெற்றி அடைந்தால் அவரும் அநீதியில் இறங்குகிறார். எனவே தான் நான் அஹ்மதிகளுக்கு கூறுகிறேன். இஸ்லாமிய நல் உலகிற்காக அதிகமாக துஆ செய்ய வேண்டும். துஆவின் பக்கம் அதிகமாக கவனம் செலுத்துங்கள்.

எல்லா நாடுகளுக்கும் இது பரவி, அநீதி ஒரு தொடர் கதையாக மாறுவதற்க முன் இறைவன் ஆட்சியாளர்களுக்கும், குடிமக்களுக்கும் நல்லறிவை வழங்குவானாக! இறையச்சத்தின் வழியை கடைபிடிப்பதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக! முஸ்லிம் ஆட்சியாளர்களிடம் இறையச்சம் இருக்கும் என்றால், உண்மையான ஈமான் இருக்கும் என்றால், வாரிசு அடிப்படையில் ராஜாக்களாக இருந்து ஆட்சி

புரிபவர்களும், அல்லது குடியரசு என்ற பெயரில் ஆட்சி நடத்துபவர்களும் தமது நாட்டின் பொதுமக்களின் நன்மையை கருத்தில் கொள்பவர்களாக இருந்திருப்பார்கள்.

அது மட்டுமல்ல; இஸ்லாமிய நாடுகளுக்கென்று ஒரு தனி அமைப்பும் இருக்கிறது. இந்த அமைப்பு வெறும் பெயரளவிலான அமைப்பாகவும் இருந்திருக்காது. மாறாக முஸ்லிம் நாடுகள் தமது பொறுப்புகளை நிறைவற்றியவாறு ஒருவருக்கொருவர் உதவி செய்பவர்ளாக இருந்திருப்பார்களே தவிர, தமது சுயநலத்திற்காக உலகில் குழப்பத்தை ஏற்படுத்தும் பிற அந்நிய சக்திகளுக்கு உதவி இருக்கமாட்டார்கள். உண்மையான இறையச்சம் இருந்தால் இஸ்லாம் உலகில் மிகப்பெரும் சக்தியாக திகழும். ஆசியக் கண்டத்தின் ஒரு பெரும் பகுதியும், பிற கண்டங்களின் ஒரு சில பகுதிகளும் முஸ்லிம் நாடுகளாகும். ஆனால் உலகல் இந்த சமுதாயம் ஏழை சமுதாயம் என்றே அறியப்படுகிறது. அல்லது முன்னேறாத சமுதாயம் என்ற அளவில் அறியப்படுகிறது. எண்ணெய் வளம் கொண்ட சில நாடுகள் கூட பிற பெரிய நாடுகளின் கட்டுப்பாட்டின்கீழ் தான் உள்ளன. இந்த நாடுகளின் பட்ஜெட் மற்றும் இவர்கள் பிற நாடுகளுக்கு வழங்கும் கடன்கள் மற்றும் இந்த நாடுகள் பிற நாடுகளுக்கு செய்து வரும் உதவிகள் மற்றும் இதற்காக நிர்ணயம் செய்யப்படும் பட்ஜெட் ஆகிய எல்லாவற்றின் கட்டுப்பாடும் அந்நிய நாட்டின் கைகளில் தான் உள்ளது.

இறையச்சம் இல்லாததன் காரணமாகவும், இறைவனுக்கு பதிலாக மனிதனுக்கு அஞ்சுவதன் காரணத்தாலும், தகுதியின்மை மற்றும் அறிவீனத்தின் காரணத்தாலும், தமது சுயநலத்தின் காரணமாகவும் இந்நிலை ஏற்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதாரம் சரியாக பயன்படுத்தப்படவில்லை. நாட்டின் தொழிற்சாலைகளை வளர்ப்பதற்காக பொருளாதாரம் பயன்படுத்தப்படவில்லை. அதே போன்று விவசாயத்தை முன்னேற்றுவதற்காகவும் பயன்படவில்லை. முஸ்லிம் நாடுகளின் ஒட்டுமொத்த செல்வம், பல்வேறு நாடுகள் பலதரப்பட்ட சீதோஷ்ன நிலையைக் கொண்டதாக இருப்பதால் பலவகையான விளைச்சல்களை உருவாக்க தகுந்தவையாக உள்ளன. பல்வேறு இயற்கை வளங்களின் செல்வம் மற்றும் மனித வளம் மற்றும் அறிவுத்திறன் ஆகியவற்றைக் கொண்டு முஸ்லிம் நாடுகள் உலகில் ஒரு பெரிய புரட்சிகளையே ஏற்படுத்த முடியும். ஆனால் ஒவ்வொரு நாட்டின் குறிக்கோளும், அது கொடுக்கின்ற முக்கியத்துவமும் வெவ்வேறாக இருப்பதால் இது நடப்பதில்லை.

முஸ்லிம் நாடுகளிலுள்ள விஞ்ஞானிகளும், கண்டுபிடிப்பாளர்களும் தமது அறிவுத்திறனின் பயன்பாட்டையும், மதிப்பையும் முன்னேறிய நாடுகளில் சென்று ஏன் செலுத்துகிறார்கள்? ஏனென்றால் அந்த அளவிற்கு அவர்களுக்கு உள் நாட்டில் மதிப்பு இல்லை. அவர்களை பயன்படுத்துவதில்லை. அவர்களுக்கு வசதிகள் அமைத்துக் கொடுப்பதில்லை. அவர்களின் கால் உள் நாட்டில் முன்னேறும் போது அரசியல்வாதிகளின் சுயநலம் அவர்களின் முன்னேற்றத்தை தடுத்து விடுகிறது. இஸ்லாமிய நாடுகளில் மலேசியா தொழில் நுட்பத்தில் மிகவும் முன்னேறிய நாடு என்று எண்ணப்படுகிறது. ஆனால் வளர்ந்த நாடுகள் மலேசியாவை வளர்ந்து வரும் நாடாகவே குறிப்பிடுகின்றன.

ஆக, இங்கும் மீண்டும் அதே விஷயம் தான் திரும்ப வருகிறது. அதாவது, இறையச்சம் அறவே இல்லை. எல்லா குழப்பங்களும் இஸ்லாத்தின் பெயரால் செய்யப்படுகின்றது. இப்போது மதிப்பீடுகள் மாறிவிட்டன. நாம் முன்னேற வேண்டும் என்றால் நாம் நமது மதிப்பை சரியாக அறிந்து கொள்ள வேண்டும். இன்றைய நாட்களில் நிலவுகின்ற சூழ்நிலை எவ்வளவு கவலைக்குரிய நிலை என்று பாருங்கள். மூஃமின்கள் ஒருவருக்கொருவர் சகோதரர் ஆவர் என்று கட்டளை இருக்கிறது. ஒரு உறுப்பு வேதனை அடைந்தால் பிற உறுப்புகளும் வேதனை அடைகின்றன. திருக்குர்ஆனில் இறைவன் கூறுகின்றான்:

**மூஃமின் ஒருவருக்கொருவர் சகோதரர்கள் ஆவர் (49:11)** என்று கூறுகிறான்.

ஆனால் சில நாடுகளில், உதாரணமாக எகிப்திலிருந்து செய்திகள் வருகின்றன. பிற நாடுகளில் இருந்தும் செய்திகள் வருகின்றன. அதாவது, அரசு சட்டப்பூர்வமாக பொதுமக்களுக்கு எதிராக எடுத்த நடவடிக்கையோடு விட்டு விடாமல் பொதுமக்களுக்கு இடையிலும் சண்டையை மூட்டிவிட்டுள்ளது. அரசுக்கு ஆதரவாக இருந்த பொதுமக்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டன. அதாவது பொதுமக்கள் பொதுமக்களுடனேயே சண்டையிட்டனர். இதில் அரசு அங்கம் வகித்தது.

முஸ்லிம் நாடு குடியரசு முறையில் ஆட்சியை அமல்படுத்துவதாக அறிவிப்பு செய்தால், பொதுமக்கள் வன்முறையால் கிளர்ச்சியில் ஈடுபடாத வரை அரசாங்கமும், பொறுத்திருக்க வேண்டும். ஆனால், செய்திகளை வைத்துப் பார்க்கும் போது வன்முறையும் கிளர்ச்சியும் அரசாங்கத்தின் தரப்பிலிருந்து முதலில் அறிவிக்கப்பட்டது. இது நூற்றுக்கணக்கான உயிர்களைக் கொன்று விட்டது. இதனால் ஒருபுறம் மேற்கத்திய நாடுகளைப் பின்பற்றி ஜனநாயக ஆட்சி வேண்டும் என்ற கோ-ம். மறுபுறம் அரசாங்கத்திற்கு சகிப்புத்தன்மை அறவே இல்லை. கொடுமை என்னவென்றால், முஸ்லிம், முஸ்லிமின் மீது அநியாயம் செய்கிறார். ஜனநாயக ஆட்சி முறையைப் பின்பற்ற வேண்டும் என்றால் அதற்கு சகிப்புத்தன்மையும் அதிகம் இருக்க வேண்டும். இஸ்லாமிய நாடுகளின் அமைப்பு இதில் நடந்து கொள்ள வேண்டிய முறைப்படி நடந்து கொள்ளவில்லை. எந்தவித சீர்திருத்த முயற்சியும் செய்யப்படவில்லை. அவை அனைத்தும் கடந்த சில வாரங்களில் எகிப்து, லிபியா போன்ற நாடுகளில் நடக்கிறது. இத்துடன் ஆஃப்கானிஸ்தான், பாகிஸ்தான் போன்ற நாடுகளின் வன்முறையாளர்களால் நடந்து வருகின்றது. உலகின் பெயரை கெடுக்கக் காரணமாக அமைந்துள்ளது. இவை அனைத்திலும், சகோதரத்துவத்தை உருவாக்குங்கள் என்று முஸ்லிம்களுக்கு இடப்பட்டுள்ள கட்டளையை மீறப்படுகிறது.

இவை அனைத்தும் இறையச்சம் முற்றிலும் மறைந்து விட்டது என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று, இறையச்சம் இல்லாததன் காரணமாகவே நடக்கிறது. எனவே இப்போது இஸ்லாத்தின் மதிப்பை பெருக்குவதற்காக இஸ்லாமிய நாட்டின் அமைதியை நிலைநாட்டுவதற்காக இஸ்லாமிய நாட்டின் ஆட்சியாளர்களுக்கும் குடிமக்களுக்குமிடையே அமைதி மற்றும் நிம்மதியை நிலைநாட்டுவதற்காக அனைவரும் இறையச்சம் கொள்வது அவசியமாகும். இதன் பக்கம் யாரும் கவனம் செலுத்தத் தயாராக இல்லை.

கவனம் செலுத்த வேண்டும் என்றால் அதற்கான ஒரே வழி தவ்பா மற்றும் இஸ்திக்ஃபார் அதாவது பாவமன்னிப்பு கேட்டவாறு எல்லா இயக்கங்களும் இறைவன் முன்னால் சிரம் பணிய வேண்டும். இறையச்சத்தின் வழியைத் தேட வேண்டும்.

**ளஹரல் பஸாது ஃபில் பர்ரி வல் பஹ்ரி** – கடலும் கரையும் குழப்பத்தால் நிரம்பியுள்ளது.

அதாவது கடலும் கரையும் குழப்பத்தால் சூழப்படுகின்ற போது எதை தேட வேண்டும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். திருக்குர்ஆன் இதற்கான தீர்வை தந்துள்ளது. ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் இவ்விஷயத்தை மிகவும் தெளிவாக விளக்கியுள்ளார்கள். இந்த குழப்பத்தைப் போக்குவதற்கு ஒரே வழிதான் உள்ளது. அந்த வழியாவது, இக்காலத்தின் மஸீஹ் மற்றும் மஹ்தியை ஏற்றுக் கொண்டு ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் ஸலாத்தை எட்ட வைப்பது ஆகும். இதன் பக்கம் கவனம் செலுத்தாத வரை உலக பேராசை வளர்ந்து கொண்டே செல்லும். சீர்திருத்துவதற்கான வழிகள் பிரகாசம் அடைவதற்கு பதிலாக இருள் நிறைந்து கொண்டிருக்கும். இதைத் தவிர வேறு இரண்டாவது வழி கிடையாது. இறையச்சத்திற்கான வழி இறைவனுடன் தொடர்பு கொள்வதன் மூலமே கிடைக்கும். இறைவனுடன் தொடர்பு, ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் மற்றும் இறைவன் கூறிய வழியில் தான் கிடைக்கும்.

கடந்த சில நாட்களுக்க முன் எனக்கு ஒருவர் ஒரு இணையதளத்திலிருந்து ஒரு பக்கத்தை பிரிண்ட் எடுத்து அனுப்பினார். அது ஆங்கில மொழியில் இருந்தது. அதில் முஸ்லிம்களின் இன்றைய நிலையைப் பற்றி விவரித்தவாறு முஸ்லிம் அமைப்பு ஒன்றின் சார்பில் கவனமூட்டப்பட்டிருந்தது. அதாவது இன்றைய நாட்களில் இஸ்லாமிய நாடுகளில் நடந்து வருகின்ற நிகழ்வுகளுக்கு நிரந்தரத் தீர்வு என்ன? என்ற கேள்விக்கு அவர் எழுதுகிறார். நான் அதை சுருக்கமாக கூறுகிறேன்.

முழு உலக முஸ்லிம் சகோதர சகோதரிகள் தமது நாட்டில் சுந்திரத்திற்காக முயற்சி செய்ததைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளோம். நாம் இந்த சம்பவங்களில் நமது ஒரு சில கருத்துக்களை கூற விரும்புகிறோம் என்று கூறி முதல் விஷயமாக அவர் எழுதுகிறார்.

அநியாயம் செய்யும் அரசுக்கு எதிராக குரல் எழுப்புவது இன்றைய இஸ்லாத்தின் தேவையாகும். இது மிகவும் வெளிப்படையான உண்மையாகும் என்பதற்கு நாம் அனைவரும் சாட்சியாவோம். எகிப்து மற்றும் தன்ஸானியா ஆகிய நாடுகளில் நிகழ்ந்த நிகழ்வுகள் தீய ஆட்சியாளர்களை ஆட்சியிலிருந்து அகற்றி விடலாம் எனறு உலகிற்கு காட்டி விட்டன.

பிறகு இன்னும் அவர் மேற்கத்திய ஊடகங்களைப் பற்றி விவரித்தவாறு இவ்வாறு எழுதுகிறார். ஊடகங்கள் இஸ்லாத்திற்கு எதிராக சில வழக்குச் சொற்களை பயன்படுத்துகிறது. இதன் விளைவாக இஸ்லாம் ஒரு பயங்கரமான மதம் போன்று காட்சியளிக்கிறது.

பிறகு எழுதுகிறார்: இந்த மக்கள் கிலாஃபத் அமைப்பை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. இதன் (கிலாஃபத்தின்) மூலம் திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸின் வாயிலாக வாழ்க்கை அமைப்பு வர்ணித்துக் காட்டப்படுகிறது. இஸ்லாமிய முறைப்படியான வாழ்க்கையில் இருந்து மக்களின் உள்ளங்களை விலக்குவதற்கான பிரச்சாரத்தை நாம் கடந்த பத்து வருடங்களாக பார்த்து வருகிறோம். இந்த தாக்குதல் பர்தா, திருக்குர்ஆன், ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் மற்றும் ஷரீஅத்தின் புனிதத் தன்மையின் மீது தொடுக்கப்படுகிறது. இது அன்றாட வாழ்க்கையில் இருந்து அரசியல் ஆட்சி வரைக்கும் எல்லா துறைகளையும் பாதிக்கிறது என்று எழுதுகிறார்.

பிறகு இஸ்லாமிய சமூகத்தில் கிலாஃபத் அமைப்பு மிகவும் இன்றியமையாதது ஆகும். இஸ்லாமிய ஆட்சி கிலாஃபத்தை மையமாகக் கொண்ட ஆட்சியாகும். எனவே இதுவே நமது மார்க்கத்தின் உயிராகும்.

இஸ்லாமிய முறையிலான ஆட்சியில் கிலாஃபத் ஒன்றுதான் ஆட்சியாளர்களை மிகவும் நெருக்கமாக கண்காணிக்க முடியும். இதில் ஆட்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்கள் நாட்டின் குடிமக்களுககு பொறுப்பாளி ஆவார்கள். சுதந்திரமான நீதிமன்றங்களும், ஊடகங்களும் இருக்கும். இங்கு பெண்களுக்கு தாய், தாரம், சகோதரி ஆகிய பதவிகள் உயர்ந்தது என்று ஆக்கப்படுகிறது. இங்கு எந்த வெள்ளையருக்கும் கருப்பரை விடை பெருமை இருப்பதில்லை. மத, இன, பாகுபாடுகள் ஏதுமின்றி ஏழை, பணக்காரர் பேதமின்றி அனைவருக்கும் ஒரே சட்டம் இருக்கும். இங்கு அரசு பொதுமக்களுக்காக உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றிற்கு வகை செய்யும். இந்த ஒரு வழிதான் உள்ளது. இந்த வழியில் நடந்தால் இஸ்லாம் தனது ஆன்மீக, நல்லொழுக்க ஒளியின் பிரகாசத்தை உலகில் மீண்டும் பரப்ப முடியும்.

இதன் பிறகு அவர் முஸ்லிம்களின் சிந்தனையை மீண்டும் கிலாஃபத்தின் பக்கம் திருப்ப முயன்றுள்ளார். அதாவது கிலாஃபத்திற்கு ஆதரவாக பிரச்சாரம் செய்யுங்கள். உலக ஆட்சி முறைக்கு எதிராக குரல் கொடுங்கள். கிலாஃபத்தை நிலைநாட்ட முயற்சி செய்யுங்கள். ஏனென்றால், இது இல்லாமல் முஸ்லிம் சமுதாயத்திலும் உலகிலும் புரட்சி ஏற்பட முடியாது என்று கூறுகிறார். இது அவர் கூறிய கருத்துகளின் சாராம்சம் ஆகும்.

எனவே, முஸ்லிம்களை ஒன்றுதிரட்டுவதற்காகவும், நீதியை நிலைநாட்டவும், உலகில் அமைதியை நிலைநாட்டவும் நிச்சயமாக கிலாஃபத் ஒன்றுதான் சரியான வழியைக் காட்ட முடியும். அரசு பதவி வகிப்பவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகிய இரு சாராரின் உரிமைகளை வரையறுப்பதும், அதன்படி செயல்படுவதன் பக்கம் கவனமூட்டுவதும் ஆகிய பணிகளை கிலாஃபத் ஒன்றுதான் சிறந்த முறையில் செய்ய முடியும்.

எழுதியவர் மிகவும் சரியாகத்தான் எழுதியுள்ளார். ஆனால் இதன் பின்னால் இருக்கும் சிந்தனை தவறாகும். பொதுமக்கள் எழுச்சியடைந்து கிலாஃபத் ஆட்சியை நிலைபெறச் செய்ய இவர் தூண்டுகிறார். இது தவறாகும். கிலாஃபத் அமைப்போடு இணைந்தால் மட்டுமே முஸ்லிம் சமுதாயம் சீர்பெறும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

நான் ஏற்கனவே கூறியது போன்று இந்த இஸ்லாமிய அமைப்பானது முஸ்லிம்களுக்கு பல்வேறு சிறந்த, சரியான தீர்வுகளை வழங்கியுள்ளது. ஆனால் இதை பொதுமக்கள் மற்றும் மனித முயற்சியால் பெற முடியாது. கிலாஃபத்தே ராஷிதா மனித முயற்சியால் நிலைபெற்றதா? மிகவும் அச்ச நிலையிலும், ஆதரவற்ற சூழ்நிலையிலும் இறைவன் மூமின்களின் உள்ளத்தில் ஊக்கத்தை ஏற்படுத்தி இறைவன் ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களை கிலாஃபத்திற்காக தேர்ந்தெடுத்தான். எனவே, கிலாஃபத் இறைவனின் அருட்கொடையாகும். மூஃமின்களுக்கு இறைவன் வழங்கும் ஓர் அருட்கொடையாகும்.

ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் தமக்குப் பின்னர் ஒரு குறிப்பிட்ட காலம் வரை கிலாஃபத்தே ராஷிதா நிலைபெறும் என்று முன்னறிவிப்பு செய்திருந்தார்கள். அதன் பிறகு தோன்றுகின்ற ஒவ்வொரு காலகட்டமும் அநீதி நிறைந்த காலகட்டமாக இருக்கும் என்றே கூறினார்கள். அதன் பிறகு இன்னொரு முன்னறிவிப்பும் செய்தார்கள். அது திருக்குர்ஆனில், **வ ஆகரீன் மின்ஹும் லம்மா யல்ஹகூபிஹிம் (62:4)** என்பதில் தென்படுகிறது. ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் முஹம்மதிய மஸீஹின் தோற்றம் என்று இதற்கு விளக்கம் கூறினார்கள். அவர் அரபி அல்லாதவரும், பாரசீக வம்சத்தைச் சேர்ந்தவராகவும் இருப்பார் என்றார்கள். அவர் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் அடிமையாகவும், ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் அச்சுப் பதிக்கப்பட்டவராகவும், ஷரீஅத்தைப் புதிதாகக் கொண்டு வராதவராகவும் இருப்பார். எனவே முஸ்லிம் கிலாஃபத்தை நிலைநாட்ட விரும்பினால் இந்த அடிப்படை விதிகளுக்கு உட்பட்ட ஒரு கிலாஃபத்தை நிலைநாட்ட முயற்சி செயய வேண்டும்.

**ஒரு ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் ஹுஸைபா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

இறைவன் நாடும் வரை உங்களில் நுபுவ்வத் இருக்கும். அதன் பிறகு அல்லாஹ் அதை எடுத்துக் கொள்வான். அதன் பிறகு இறைவன் நுபுவ்வத் வழியில் கிலாஃபத்தை வழங்குவான். பிறகு இறைவன் நாடும் போது அதையும் எடுத்துக் கொள்வான். அதன் பிறகு இறைவனின் திட்டத்தின்படி கொடுங்கோல் ஆட்சி நிலவும். இதனால் மக்கள் மிகவும் சிரமப்படுவார்கள். இந்த காலம் முடிந்தவுடன் அவனது இரண்டாவது திட்டத்தின்படி அதைவிட இன்னும் கடுமையான கொடுங்கோல் ஆட்சி நிலவும். பிறகு இறைவனின் கருணை பொங்கி எழும். பிறகு இந்த அநியாயமான காலகட்டத்தை இறைவன் முடிவுக்குக் கொண்டு வந்து விடுவான். பிறகு நுபுவ்வத்தின் வழியில் கிலாஃபத் நிலைபெறும். இதைக் கூறிய பிறகு ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் அமைதியானார்கள்.

எனவே, கிலாஃபத்தை நிலைநாட்டுவதற்கு இறைவனின் கருணை பொங்கி எழ வேண்டும். அதை விட்டு விட்டு இஸ்லாமிய ஆட்சியாளர்களுக்கு எதிராக பொதுமக்கள் காட்டும் எழுச்சியின் மூலம் கிலாஃபத் நிலைபெறாது. இவ்வாறு ஒவ்வொரு நாட்டிலும் கிலாஃபத்தை உருவாக்குவார்களா? ஒரு நாட்டில் கிலாஃபத்தை

உருவாக்கினால் முஸ்லிம்கள் எந்த அமைப்பில் ஒன்றுசேர்வார்கள்? தொழுகைக்குக் கூட தனித்தனி இமாம் நியமிக்கப்படுகிறார். ஒரு பிரிவு மற்ற பிரிவை இமாமாக ஏற்றுக் கொள்வதில்லை.

எனவே இதற்கு ஒரு வழி தான் இருக்கிறது. முதலில் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளுங்கள். அதன் பிறகு அவர்களைத் தொடர்ந்து வந்த கிலாஃபத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். இந்த கிலாஃபத் வன்முறையாளர்களுக்கு எதிராக வன்முறையின் விளைவாக நிலைநாட்டப்பட்ட முஸ்லிம் சமுதாயத்தின் இரண்டு பிரிவினர்கள் மத்தியில் துப்பாக்கிச் சூடு நடத்தியோ அல்லது கொலைகளைச் செய்தோ உருவாகவில்லை. மாறாக இது இறைவனின் கருணை எழுச்சி பெற்றதால் உருவாகிய கிலாஃபத்தாகும். இறைவனின் கருணை மற்றும் அருட்கொடையாக கிடைத்த கிலாஃபத் இஸ்லாமிய சமுதாயத்திற்கு மட்டும் அமைதி, அன்பு, நேசம் ஆகியவற்றை வழங்குவதற்கு உத்திரவாதம் அளிக்காது. மாறாக, இது முழு உலகிற்கும் அமைதியைத் தர உத்திரவாதம் அளிக்கிறது. இது நாடுகளுக்கு நீதி, நேர்மை ஆகியவற்றின் பாதையில் வழிநடக்க கவனமூட்டும். பொதுமக்களுக்கும் நேர்மை மற்றும் உழைப்பு ஆகியவற்றின் பக்கம் கவனமூட்டும்.

எனவே ஜமாஅத்தே அஹ்மதிய்யா எப்போதும் போன்று இன்றும், உலகில் பரவியுள்ள குழப்பத்திற்கு ஒரே வழியைக் காட்டுகிறது. அதாவது சிறந்த சமுதாயமாக ஆவதற்கு ஒரு கையில் ஒன்றுசேர்ந்து உலகத்தின் உள்ளத்தில் இருந்து அச்சத்தைப் போக்கி, முழு உலகிற்கும் அன்பு, நேசம் ஆகியவற்றிற்கான உத்திரவாதத்தை அளியுங்கள். இறைவனிடம் தொடர்பை ஏற்படுத்தி நீங்கள் உங்களது இம்மையையும் மறுமையையும் சீர்திருத்திக் கொள்ளுங்கள். இறைவன் இப்போதும், தான் நாடுபவரை தனது நண்பனாக்கிக் கொள்வான் என்ற விஷயத்தில் உறுதியாக இருங்கள். இதன் மூலம் சிறந்த சமுதாயம் எப்போதும் தனது மகத்துவத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கட்டும்.

இவ்வனைத்தும் காலத்தின் இமாமோடு இணைவதால் ஏற்படும். இந்த ஒரு வழியின் மூலம் தான் முஸ்லிம்களின் நிலை சீர்பெறும்.

**<u>ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்.</u>**

இந்த அடியான் (நான்) திருக்குர்ஆனின் கட்டளைகளை மிகவும் தெளிவாக எடுத்துக் கூறுவதற்காகத்தான் அனுப்பப்பட்டுள்ளேன். நான் உண்மையாகவே கூறுகிறேன். மஸீஹின் கையால் உயிர் பெற்றவர்கள் மரணித்து விட்டனர். ஆனால் எனக்கு கொடுக்கப்பட்டுள்ள கிண்ணத்திலிருந்து பானம் அருந்துபவர் ஒருபோதும் மரணிக்கமாட்டார். நான் வாழ்க்கையை வழங்கக் கூடிய விஷயங்களைக் கூறுகிறேன். என் வாயிலிருந்து வெளிப்படுகின்ற ஞானத்தைப் போன்று வேறு ஒருவரால் ஞானத்தை வழங்க முடிந்தால் நான் இறைவன் புறமிருந்து வந்தவன் அல்ல என்று நீங்கள் கருதலாம். ஆனால் நான் போதிக்கின்ற ஞானம் மிகுந்த போதனைகள் யாவும் இறந்த உள்ளங்களுக்கு உயிரூட்டும் பானம் ஆகும். இவை வேறு யாரிடமும் இருந்து கிடைக்காது. இதன் பிறகு நீங்கள் இந்த நீரூற்றை மறுத்து விட்டால் இந்தக் குற்றத்திற்கு எந்த சாக்குப்போக்கும் செல்லுபடியாகாது. வானத்திலிருந்து திறந்துவிடப்பட்ட இந்த அறிவு நீரூற்றை உலகத்தில் யாராலும் தடுத்துவிட முடியாது. எனவே நீங்கள் எதிர்ப்பதில் அவசரம் காட்டாதீர்கள். தெரிந்து கொண்டே நீங்கள் இறைவன் கூறும் இந்த குற்றத்தைச் செய்து பழியை உங்கள் மீது நீங்களே போட்டுக் கொள்ளாதீர்கள்.

**<u>இறைவன் கூறுகிறான்:</u>**

**உமக்கு எதனைப் பற்றிய அறிவு இல்லையோ அதனை பின்பற்றாதீர். ஏனென்றால் காது, கண், மனம் இவை எல்லாவற்றையும் குறித்து உம்மிடம் விசாரிக்கப்படும். (17:37)**

தப்பெண்ணத்தில் எல்லை மீறாதீர்கள். நீங்கள் உங்கள் கூற்றுக்களின் காரணமாக பிடிக்கப்பட்டு விடாதீர்கள்.

முஸ்லிம்களே! நீங்கள் உண்மையான உள்ளத்தோடு இறைவன் மற்றும் அவனது தூய ரஸூல் (ஸல்) அவர்களின் மீது ஈமான் கொண்டவர்கள் என்றால், இறைவனின் உதவியை எதிர்பார்த்து இருக்கிறீர்கள் என்றால் இறை உதவிக்கான நேரம் வந்து விட்டது என்பதை தெரிந்து கொள்ளுங்கள். இந்த வியாபாரம் மனிதனுடையது அல்ல. அவ்வாறே எந்த ஒரு மனிதனின் திட்டமும் இதற்கு அடித்தளம் அமைக்கவில்லை. மாறாக, இது ஏற்கனவே தூய வேத நூல்களில் முன்னறிவிக்கப்பட்ட அதே விடியற்காலை ஆகும். இறைவன் உங்களுக்கு தேவையுடைய போது உங்களை நினைத்திருக்கிறான். நீங்கள் பாதாளக்குழியில் விழுந்திருப்பீர்கள். ஆனால் இறைவனின் கருணை மிகுந்த கரங்கள் உடனடியாக உங்களை உயர்த்தி விட்டது. எனவே நன்றி செலுத்துங்கள். இன்று உங்கள் புத்துணர்விற்கான நாள் பிறந்து விட்டது என நீங்கள் மகிழ்ச்சியில் துள்ளிக் குதியுங்கள். இறை நேசர்களின் இரத்தத்தால் நீர் பாய்ச்சிய மார்க்கத்தின் இந்தத் தோட்டத்தை இறைவன் ஒருபோதும் வீணாக்கமாட்டான். பிற சமுதாயத்தின் மார்க்கங்களைப் போன்று இஸ்லாமும் வெறும் கட்டுக் கதைகளாக இருக்க இறைவன் விரும்பவில்லை. இருள் முழுமையாக வெற்றி கொண்ட பிறகு அவன் தன் புறமிருந்து ஒளியினை வழங்குகிறான்.

எனவே இறைவனின் கருணையின் எழுச்சி கலீஃபத்துல்லாஹ், அதாவது இறைவனின் கலீஃபாவை அனுப்பியது தான். அந்த இறைவனின் கலீஃபா நமது நம்பிக்கையின்படி ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பை நிறைவேற்றிய போது ஈமானை கார்த்திகை நட்சத்திரத்திலிருந்து பூமிக்கு கொண்டு வந்துள்ளார்கள். இஸ்லாத்தின் உண்மையான ஒளியை நமக்கு காட்டி விட்டார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்குப் பிறகு அவர்களால் முன்னறிவிக்கப்பட்டபடி மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கிலாஃபத் தொடங்கி விட்டது. இந்த கிலாஃபத்தைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் சென்ற பிறகு இறைவன் தனது இரண்டாவது வல்லமையை உங்களுக்கு வெளிப்படுத்துவான். அது எப்போதும் உங்களுடன் இருக்கும்.

இக்கருத்தை ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களும் கூறியுள்ளார்கள் என்று முன்னர் நான் கூறினேன்.

எனவே அஹ்மதிகள் எவ்வளவு முடியுமோ அவ்வளவு அதிகமாக இந்த தூதுச் செய்தியை மக்களுக்கு எட்ட வையுங்கள். உங்களுக்கு உங்களுடைய உறுதிப்பாடு கிலாஃபத்தின் கேடயத்தின் பின்னால் தென்படுகிறது என்றால் அந்த கிலாஃபத் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப மலர்ந்து விட்டது. இதற்காக எவ்விதமான எழுச்சி மிகுந்த போராட்டத்திற்கும் அவசியமில்லை. எவ்வித துப்பாக்கிச் சூடும் தேவையில்லை. இந்த அருட்கொடையானது இறைவனின் அருளால் மட்டுமே கிடைக்கக் கூடியதாகும். அது கிடைத்து விட்டது. இது பொதுமக்களின் தூண்டுதலாலோ எழுச்சியாலோ உருவாகும் ஒன்றல்ல. எனவே வாருங்கள். இந்த இறைவனின் ஜமாஅத்தின் அங்கமாக மாறி முஸ்லிம் சமுதாயத்தின் வலிமைக்கு உறுதுணையாக இருங்கள்.

இந்த வழி மட்டுமே இறைவனின் மீது கொண்டிருக்கும் ஈமானை முழுமையாக்கும் வழியாகும். இந்த வழி மட்டுமே ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் மீது நேசம் கொள்வதற்கும் அவர்களுக்கு கட்டுப்பட்டிருப்பதையும் உண்மையான முறையில் வெளிப்படுத்தும் வழியாகும். முஸ்லிம்களுக்கு இந்த அடிப்படைக் கருத்தை புரியக்கூடிய நல்வாய்ப்பை இறைவன் வழங்குவானாக. அங்கும் இங்குமாக தடுமாறுவதற்கு பதிலாக இறைவன் கூறிய வழியை கடைபிடிப்பார்களாக.

ஆக, இந்த வழியைக் கடைபிடிப்பதுதான் சிறந்த தீர்வு என்று இவர்களே கூறியுள்ளார்கள். முஸ்லிம் சமுதாயம் இறைவனின் அருளை ஈர்ப்பதற்கு அவசியமான ஆன்மீக வழிமுறை இது என்பதை இவர்களே ஏற்றுக் கொண்டுள்ளார்கள். இதன் பக்கம் அஹ்மதிகளுக்கு வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் கவனமூட்டி வருகிறார்கள். இனியும் கவனமூட்டி வருவார்கள். மஸீஹ் மற்றும் மஹ்தியை ஏற்றுக் கொண்டு உங்களது உறுதிப்பாட்டிற்கான ஏற்பாட்டை செய்து கொள்ளுங்கள்.

எவ்வாறிருப்பினும், நான் முன்னதாகக் கூறியதற்கு ஏற்ப அஹ்மதிகள் துஆவின் பக்கமும் குறிப்பாக கவனம் செலுத்தி வாருங்கள். பௌதீக முறையில் மக்களுக்கு புரிய வையுங்கள். இறைவன் ஒவ்வொரு முஸ்லிம் நாட்டிற்கும் விழிப்புணர்வு மிக்க, நீதியை விரும்புகின்ற இறை அச்சத்தைக் கொண்ட நல்ல தலைமையை வழங்குவானாக என்று துஆ செய்ய வேண்டும். இதுவரைக்கும் உள்ள நிலைமையை வைத்துப் பார்க்கும் போது வெளிப்படையில் நிம்மதியாக இருப்பது போல தோன்றினாலும் இதில் அரசியல்வாதிகளின் சுயநலம்தான் தென்படுகிறது. புதிய ஆட்சியாளர்களாக பதவி ஏற்பவர்களும் சுயநலவாதிகளாகவே தென்படுகிறார்கள். முகங்கள் மாறுகின்றது. ஆனால் ஆட்சி முறை பழைய மாதிரியே தான் இருக்கிறது. சில நாடுகளின் பொதுமக்களுடைய எதிர்நடவடிக்கையை தற்போது நாம் பார்த்து வருகிறோம். அங்குள்ள நிலைமையைப் பொருத்த வரை வெள்ளம் தலைக்கு மேல் போய் விட்டது என்றே கூற வேண்டும். அங்குள்ள கொடுங்கோல் ஆட்சியாளர்கள் கூட பொதுமக்களின் உரிமைக்கு குரல் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள். இந்த உணர்வு இவர்களுக்கு முன்கூட்டியே வந்திருப்பின் பொதுச் சொத்துகளுக்கு இவ்வளவு சேதம் ஏற்பட்டிருக்காது. உயிர்ச்சேதமும் இந்த அளவுக்கு இருந்திருக்காது. இந்நிலையில் எல்லா நாடுகளும் பாதுகாப்பின்றி காணப்படுகிறது. இதற்குப் பின்னால் நின்று செயல்படுகின்ற சக்திகள் நாட்டில் அமைதியை நிலைநிறுத்துகின்றவர்களா? அல்லது நாற்காலியை அபகரிப்பவர்களா? அல்லது குழப்பம் செய்பவர்களா?

சவூதி அரேபியாவில் முழுமையான மன்னராட்சி நிலவி வருகிறது. அவர்களும் அண்டை நாட்டு மக்களின் போக்கை சார்ந்து நாங்களும் எங்கள் நாட்டு மக்களுக்கு இன்னும் அதிக சலுகைகளை வழங்குவோம் என்று அறிவித்துள்ளனர்.

எவ்வாறிருப்பினும் இந்த சூழ்நிலையில் சில சக்திகள் வளர்கின்றன. இந்த சக்திகள் யாவும் புதிய உக்திகளையும் முயற்சிகளையும் கொண்டு இப்போது களத்தில் இறங்குவதற்கு திட்டங்கள் தீட்டுகின்றன என்று கூற வேண்டும். இதில் ஒரு பிரிவினர் பெரிய சக்திகளுக்கு நீங்கள் உங்களது முந்தையகால அடிமைகளை நன்கு கண்டு விட்டீர்கள். இப்போது எங்கள் சக்தியையும் பரிசோதித்துப் பாருங்கள் என்று அவர்களுக்கு உணர்த்த விரும்புகின்றனர். அல்லது முந்தைய ஆட்சியாளர்கள் தமது எஜமானர்களின் முன்னிலையில் சில மக்களை சமர்ப்பித்து விட்டனர். அவர்களின் ஆட்சி முறை மற்றும் பாலிஸி அதே பாலிஸியாகத்தான் இருக்கும். அதே சமயம் உங்களது சுயநலன்களும் பாதுகாக்கப்படும் என்ற வாக்குறுதியை வழங்கியவாறு ஆட்சிக்கு வருவார்கள். முகங்கள் மாறுவதால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்து விடுவார்கள். அல்லது கொஞ்ச காலத்திற்கு நிம்மதி பெறுவார்கள். ஆனால் தற்போது மக்களிடையே உருவாகிவரும் சிந்தனையையும், கருத்துக்களை வெளிப்படுத்துகின்ற சான்றோர்களின் கணிப்பின்படியும் பார்க்கும் போது, மக்களிடம் மிகவும் அதிக விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கிறது. மேலும் பொதுமக்கள் இந்த மாதிரியான ஆட்சியை வெகுகாலம் வெற்றியடைய விடமாட்டார்கள் என்று கூறுகின்றார்கள். எனவே நிம்மதியற்ற இந்நிலை இன்னும் தொடர்ந்த வண்ணம் இருக்கலாம்.

இரண்டாவது அபாயகரமான நிலைமை என்னவென்றால், மார்க்க வன்முறையாளர்களும் இந்த நிலையிலிருந்து பயனடைய முயற்சி செய்வார்கள். பயனடைந்தும் வருகின்றனர். தொடக்கத்தில் மிகவும் நீதியான ஆட்சியை நடத்தவும் வாய்ப்பிருக்கிறது. அல்லது நாங்கள் நீதியான ஆட்சியை நடத்துகிறோம் என்று

வெளிக்காட்டிக் கொள்வார்கள். ஆனால் மெல்ல மெல்ல இவர்கள் குணத்தைக் காட்டுவார்கள். இதனால் முஸ்லிம்களுக்கு இன்னும் அதிக கஷ்டகாலம் தொடங்குவதற்கான அபாயம் உள்ளது.

பெரிய சக்திகள் இதற்கு எதிராக வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் ஹிக்மத்தாக செயல்படும். அவை முஸ்லிம்களுக்கு இழப்பை ஏற்படுத்தக் காரணமாக அமையும் என்பது தெரிந்ததே. பெரிய சக்திகள் சில குறிப்பிட்ட இடங்களில் தமது நலன் பாதிப்பதை ஒருபோதும் பொறுத்துக் கொள்ளாது. பெரிய சக்திகளுக்குள் நிலவும் பனிப்போர் இப்போது மெல்ல மெல்ல மீண்டும் உச்சத்தை நெருங்குகிறது. இதன் விளைவாக நிம்மதியற்ற நிலையும், பல்வேறு பிரிவினரின் குழப்பங்கள் மக்கள் புறமிருந்து பரவிக் கொண்டே செல்லும். இன்னும் சில மூன்றாவது உலக ஏழை நாடுகள் இவை முஸ்லிம் நாடுகள் என்றே நாம் கூற வேண்டும். இந்த நாடுகளில் காணப்படும் உட்பூசல்கள் பெரிய சக்திகள் அந்நாட்டில் இருந்து கண்டுவரும் பலன்களில் ஏற்படும் மோதல்களின் காரணமாகவே நிலவுகிறது. நான் கூறியது போன்று முஸ்லிம் நாடுகளின் இந்தக் கவலைக்குரிய நிலைமைக்கு காரணம் அந்நாட்டின் வழிகாட்டல்கள் சமுதாய மற்றும் நாட்டின் நலனை பாதுகாக்க செய்ய வேண்டிய கடமையை நிறைவேற்றவில்லை. ஆணவம் மற்றும் சுயநலத்தின் காரணமாக அன்னியர்களின் கையில் பொம்மைகளாக உள்ளனர். பிறகு முல்லாக்கள் இறையச்சம் இல்லாததன் காரணமாக சுயநலம் உடைய அரசியல்வாதிகளை விட அபாயகரமானவர்கள் ஆவர். நாட்டின் அமைதிக்கும் உலக நிம்மதிக்கும் இவர்கள் பெரும் அபாயத்தை விளைவிக்கக் கூடியவர்கள் ஆவர். இந்த சூழ்நிலை அவ்வப்போது இன்னும் அபாயகரமாக வளர்ந்து வருகிறது. இதற்காக மிக அதிகமாக கவலைப்படுவதும் துஆ செய்வதும் அவசியமாகும்.

பொறுப்புகளை அபகரிப்பதற்கும் செல்வங்களை சுருட்டுவதற்கும் இலாக்காவின் முக்கியவத்துவத்தை மையமாகக் கொண்டு ஒவ்வொரு சக்தியும் அங்கு கால் பதிக்க முயற்சி செய்கிறது. முஸ்லிம் உலகில் அக மற்றும் புற சக்திகளில் யார் இவைகளை முதலில் அபகரிப்பது என்று மல் யுத்தம் நடந்து வருகிறது. இதன் காரணமாக பொதுமக்கள வதைக்கப்படுகிறார்கள். நாடு சில அடிகள் முன்னேறினால் சுயநலவாதிகள் அல்லது சுயநல சக்திகள் நாட்டை பல அடிகள் பின்னுக்கு தள்ளி விடுகிறார்கள்.

ஒரு காலத்தில் ஈராக்கைப் பற்றி இது மிகவும் வேகமாக வளர்ந்து வருகிறது என்றும், ஈராக்கிற்கு வந்தால் ஐரோப்பாவின் மிகவும் முன்னேறிய நாட்டிற்கே வந்தது போன்று தோற்றமளிக்கிறது என்றும் கூறினார்கள். ஆனால் கடந்த இருபது ஆண்டுகளாக அங்கு நடந்து வரும் குழப்பங்கள் மற்றும் நிம்மதியற்ற சூழ்நிலையும் போரும் அந்நாட்டை சுடுகாடாக மாற்றி விட்டது. ஈராக்கின் இந்த நிலையோடு அரபு உலகம் குறிப்பாகவும் அரபு நாடுகளை ஒட்டியுள்ள சில ஆப்பிரிக்க இஸ்லாமிய நாடுகளில் பொதுவாகவும் நிம்மதியற்ற சூழ்நிலை மிகுந்து விட்டது.

பெரும் சக்திகள் செல்வங்கள் கிடைக்கும் இடங்களை குறி வைத்து தமது காலைப் பதிக்க விரும்புகின்றன. பெயர் தாங்கிய இஸ்லாமிய அமைப்புகளும் அங்கு கால் பதிக்க விரும்புகின்றன. நாட்டின் பொதுமக்களுக்கு இரு புறமிருந்தும் பசுமையான தோட்டங்கள் காட்டப்படுகின்றன. அரசியல்வாதிகள் நேர்மையானவர்களாக இருந்தால், ஆட்சியாளர்கள் தமது குடிமக்களுக்கு உண்மையான மனப்பான்மையுடன் நன்மையை நாடினால் அவர்களது உரிமைகளைப் பாதுகாத்து வந்தால் நாட்டில் ஒருபோதும் நிம்மதி கெடாது. வன்முறையாளர்களின் இயக்கங்கள் வளர வாய்ப்பு கிடைக்காது. அந்நிய சக்திகள் தவறான முறையில் நலனைப் பெற வாய்ப்பு கிடைக்காது.

சுருக்கமாக கூறுவதென்றால், இப்போது எங்கும் காணப்படுகின்ற அநீதி உலகத்தை அழிவின் பக்கம் கொண்டு செல்வது தெளிவாக தெரிகிறது. உண்மையான இறையச்சம் பிறக்கவில்லை என்றால் நீதி நிலை பெறவில்லை என்றால் இன்று இல்லை என்றால் நாளை இந்த அழிவுகளும், போரும் முழு உலகத்தையும்

அபகரித்து விடும். இதற்கான காரணமாக சில முஸ்லிம் நாடுகள் கூட ஆகிவிடலாம். இதுவும் வெகு தூரத்தில் இல்லை. எனவே இது மிகவும் கவலைக்குரிய நிலையாகும். இறைவன் இஸ்லாமிய உலகிற்கு நீதியை விரும்பும் தலைவர்களையும், இறையச்சம் உடைய ஆட்சியாளர்களையும் வழங்குவாயாக.

திருக்குர்ஆனின் கட்டளையாகிய, **நேர்மையிலும் இறையச்சத்திலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவுங்கள். (5:3)** என்ற வசனத்தின்படி செயல்படுபவர்களாக இருப்பார்களாக. உண்மையான முறையில் ஒத்துழைப்பு தருபவர்களாகவும், ஒத்துழைப்பு வேண்டுபவர்களாகவும் இருக்க வேண்டும். பொதுமக்களிடம் இறையச்சத்தில் நிலை கொண்டவாறு நன்மைக்காக ஒத்துழைப்பு வேண்டினால் நன்மையின் பேரில் அண்டை நாட்டவருடன் ஒத்துழைப்பு வேண்டினால், இறை படைப்பினங்களுடன் இறையச்சத்தில் நிலை கொண்டவாறு பேணி வந்தால் அமைதி நிலை பெறுவதுடன் நாடுகளும் முன்னேறும்.

வெளிப்படையாகப் பார்க்கும் போது, **நேர்மையிலும் இறையச்சத்திலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவுங்கள் (5:3)** என்ற வசனத்தின் நிலை தென்படவில்லை.

மாறாக, எல்லா புறமும், **நிலத்திலும் கடலிலும் குழப்பம் பரவி உள்ளது** (30:42) என்ற நிலைதான் காணப்படுகிறது. நான் முன்னதாக கூறியது போன்று இந்நிலையில் நாம் துஆதான் செய்ய முடியும். அல்லது அதிகபட்சமாக ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மக்கள் வரை தான் நமது குரலை எட்ட வைக்க முடியும்.

இன்று அஹ்மதிகள் தான் இவ்வுலகில் அமைதிக்கு உத்தரவாதம் ஆவர். இன்று உலகம், உலக சுகபோகங்கள் தான் எல்லாம் என்று கருதுகிறது. ஆனால் அஹ்மதி உயிருள்ள ஓர் இறைவனின் அடையாளங்களைப் பார்க்கும் போது இறைவனை மட்டுமே நம்புகிறார். இறைவனின் வல்லமையின் வெளிப்பாட்டைப் பார்க்கிறார். இறையச்சத்தை உள்ளத்தில் நிலைபெறச் செய்ய முயற்சி செய்கிறார். இதற்காக இறைவன் முன் குனிவதுதான் எல்லாம் ஆகும்.

பங்களாதேஷைச் சார்ந்த ஒரு புரொஃபொஸர் சாஹிப் சில தினங்களுக்கு முன்னர் என்னை சந்திக்க வந்தார். அவர் ஜமாஅத்தே அஹ்மதிய்யா உலகில் பெரும்பான்மையினராக ஆகும் போது பிற மதத்தினர் மீது அநீதியிழைக்காது. மக்களின் உரிமைகள் அபகரிக்கப்படாது என்பதற்கு என்ன உத்திரவாதம் உள்ளது? என்று கேட்டார்.

அதற்கு நான், மக்களின் உள்ளங்களை வென்று உலகில் பெரும்பான்மையினராக உருவெடுக்கிற சமுதாயம், பலவந்தத்திற்குப் பதிலாக மக்களிடம் அன்பின் தூதுச் செய்தியை எடுத்துச் செல்கின்ற சமுதாயம் அநீதியிழைப்பதில்லை. மாறாக அன்பையும் நேசத்தையும் பரப்புகிறது. இவ்வாறான சமுதாயத்தின் குறிக்கோள் இறையச்சமாக இருக்கும். இறைவனின் திருப்தி அதன் நோக்கமாக இருக்கும். அது நன்மையில் ஒத்துழைப்பு தருவதாகவும் நன்மையில் ஒத்துழைப்பு பெருகுவதாகவும் இருக்கும். பிறகு கிலாஃபத்தே ராஷிதாவின் நிலைப்பாடு நீதியை நிலைநாட்டுவதற்கே ஆகும். மக்களுக்கு உரிமையை பெற்றுத் தருவதற்காக ஆகும். உரிமைகளை அபகரிப்பதற்காக அல்ல. கிலாஃபத்தின் பைஅத்தைப் பெற்ற அரசாங்கம் இறை படைப்பினங்களின் உரிமையைப் பேணுவதன் பக்கம் தான் கவனம் செலுத்துமே தவிர உரிமைகளை அபகரிக்க முயற்சி செய்யாது. மனித பலவீனங்களின் காரணமாக சில தீர்ப்புகள் தவறாகவும் ஆகி விடலாம். ஆனால் இறையச்சம் இருப்பின் அவை சீர்திருந்தி விடுகின்றன.

எவ்வாறிருப்பினும், மவ்லவிகளின் சொல்லைக் கேட்கும் உலகத்திறகு அஞ்சியும் மிகப்பெரிய எண்ணிக்கையிலான முஸ்லிம் மக்களால் உண்மையான முஸ்லிம்களாகிய அஹ்மதிகளுக்கு எதிராக அநியாயமும் வரம்புமீறல்களும் செய்யப்படுகின்றன. இது எதிரிகளின் செயல்பாடாகும். இவர்கள் தங்கள் செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டிருந்த போதிலும் அஹ்மதிகள் தற்போதைய சூழ்நிலையில் நிம்மதி இழந்தவர்களாக உள்ளனர்.

எனக்கு எழுதுகின்ற கடிதத்தின் மூலம் சிலர் இதை என்னிடம் வெளிப்படுத்துகின்றனர். இஸ்லாத்தின் இன்றைய உலகை காணும் போது நாங்கள் கவலைக்கு ஆளாகின்றோம் என்று கூறுகின்றார்கள். எனவே நமது கடமை என்னவென்றால், எல்லா நிலையிலும் முஸ்லிம்களுக்காக கவலைப்பட வேண்டும். அவர்களுக்காக அனுதாபம் கொள்ள வேண்டும். அவர்களுக்காக துஆ செய்ய வேண்டும். இன்ஷா அல்லாஹ் நாம் இதை செய்து கொண்டேயிருப்போம்.

இறுதியில் நான் மீண்டும் கூறுகிறேன். இஸ்லாமிய நாடுகளில் வசிக்கின்ற அஹ்மதிகளுக்கு செல்வாக்கு இருக்குமென்றால் இஸ்லாமிய அரசியல் வாதிகளிடமும் ஆட்சியாளர்களிடமும் நீங்கள் இப்போது சுதாகரிக்கவில்லை என்றால், நீதியையும் இறையச்சத்தையும் நிலைநாட்ட முழுமையாக முயற்சி செய்யவில்லை என்றால், முல்லாக்களின் பிடியிலிருந்து உங்களை நீங்கள் விடுவித்துக் கொள்ளவில்லை என்றால், வன்முறையைத் தூண்டும் அமைப்புகளை நெருக்கமாக கண்காணிக்க வில்லை என்றால் முல்லாக்கள் மதத்தின் பெயரால் சில நாடுகளின் ஆட்சியைக் கைப்பற்ற முயற்சி செய்தாலும் அது ஆச்சரியப்படுவதற்கில்லை.

பிறகு மதத்தின் பெயரால் மிகவும் அபாயகரமான விளைவுகள் ஏற்படும். இதன் விளைவாக பொதுமக்கள் இன்னும் அதிக இருளில் தள்ளி விடுவர். மார்க்கத்தின் பெயரால் ஒரு பிரிவினர் இன்னொரு பிரிவினரின் மீது கொடுமையிழைத்துக் கொண்டே செல்வார்கள். இந்த பதற்றமான சூழ்நிலையில் பெரிய சக்திகளுக்கு தங்கள் விருப்பத்தின்படி ஊடுருவ வாய்ப்பு கிடைத்து விடும். அமைதியை நிலைநாட்ட வந்தோம் என்ற பெயரில் உங்கள் நாட்டில் வந்து உட்கார்ந்து கொள்ள நீங்களே அனுமதி சான்றிதழ் வழங்கி விடுவீர்கள்.

இதனால் மீண்டும் குழப்பம் ஏற்படும். உயிர் சேதம், பொருள் சேதம் ஏற்படும். நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நீங்கள் அடிமைத்தனம் என்ற சங்கிலியால் பிணைக்கப்படுவீர்கள். இது நிச்சயமாக நடந்தே தீரும். இதனால் பிறகு ஒரு பெரிய போர், உலகத்தை ஆட்டிப் படைத்து விடும். இதற்கான வாய்ப்பு உள்ளது.

அல்லாஹ் கருணை காட்டுவானாக. முஸ்லிம் சமுதாயத்திற்கும், இஸ்லாமிய வழிகாட்டிகளுக்கும் இறைவன் நல்லறிவை வழங்குவானாக. இறையச்சத்தை உள்ளங்களில் உருவாக்குபவர்களாக இவர்கள் ஆகுவார்களாக.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 25.02.2011**

Translated by : **Maulvi S. ABDUL QADIR Sb.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**